பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 10 | புதன்கிழமை | 25.12.2024 | அதிர்வு 145






# ஓர் அழகான நாட்டை உருவாக்க அனைவரும் உறுதி பூணுவோம்!

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

"வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான அரசியல் கலாசாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஓர் அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம்."

-இவ்வாறுஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்க தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 05▶

# வடக்கு ஆசிரியர் பிரச்சினைக்கு அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வு



வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல 05▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியில் 'மாவை அண்ட் கோ'வின் ராஜினாமா அத்தியாயம் தொடரும் போல தென்படுகிறது.

ஏற்கனவே ஒரு தடவை முன்னர் தமிழரசு கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு அதை அப்படியே வைத்துக் கொண்டு அந்தப் பதவியில் தொடர்ந்தவர் மாவை என்பதும், இப்போது மீண்டும் ராஜினாமாச் செய்த பின்னர் – அது செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு – தாம் இன்னும் தலைவர் என்று அவர் அடம் பிடிப்பதும் நமக்குத் தெரிந்தவைதான்.

அவரது மகன் கலையமுதன் ஏற்கனவே கட்சியின் மத்திய குழுவில் இருந்து கடிதம் மூலம் ராஜினாமாச் செய்து விட்டு, திரும்பவும் அப்பதவியில் தொடர்கின்றமை பற்றியும் ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தேன்.

இப்போது மாவை சேனாதிராஜாவே கட்சியின் தலைமைப் பதவியில் தொடர வேண்டும் என்று அடம் பிடிக்கும் அவரது வலது கையான கட்சியின் இணைப்பொருளாளர் கனகசபாபதியும் 05▶

# பருத்தித்துறையில் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் நேற்று இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி




(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் நேற்று இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4 நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மேற்படி இருவரும் நோய் மிகவும் தீவிரமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

“மக்கள் தற்போது முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன் மூலம் நோய் தீவிரமாகுவதையும் இறப்பையும் தடுக்கலாம், குறைக்கலாம்.” – என்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# தேங்காய் ஏற்றுமதி வருமானம் நவம்பர் மாதத்தில் அதிகரிப்பு



தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்களின் ஏற்றுமதி வருமானம் கடந்த நவம்பர் மாதத்தில் 13.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்படி, 70 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வருடத்தின் முதல் 11 மாத காலப்பகுதியில் தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் 782 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் ஏற்றுமதி நடவடிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சந்தையில் தேங்காய்க்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழ்ப்பாணத்தில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை!

(எஸ்.ரகுதீஸ்)

பண்டிகைக் காலத்தையொட்டி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் நேற்று திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நல்லூர், உடுவில் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் களப் பரிசோதனையில் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த 9 குழுக்கள் ஈடுபட்டிருந்தன.

இவர்களால் நேற்று 76 உணவு கையாளும் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட்டன. இவற்றில் 28 உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்டிருந்தன. 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு குறைபாடுகளை சீர்செய்யும்படி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. 15 உணவு கையாளும் நிலையங்களில் தரமற்ற உணவுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 2 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இந்தப் பரிசோதனை நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.” – என்றார்.






# வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் இனி கிளிநொச்சியில் புதிய கட்டடத்தில் இயங்கும்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் எதிர்வரும் 3 ஆம் திகதியில் இருந்து கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது. இதற்கான புதிய அலுவலகம் ஒன்று கிளிநொச்சி நகரில் பிரதான தபாலகம் அருகில் அமைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகம் எதிர்வரும் 3ஆம் திகதி திறக்கப்பட்டு அன்று தொடக்கம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 4 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய மாகாண காணி ஆணையாளர் குகநாதனால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மது சாலைகளை மூடுவதற்கு சட்ட நடவடிக்கையும் தேவை

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்குப் பொது அமைப்புக்கள் மகஜர்



(எஸ்.ரகுதீஸ்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் குறுகிய காலப்பகுதிக்குள் 16 மதுபானசாலைகளுக்கு உரிமம் அளிக்கப்பட்ட விவகாரம், பொதுமக்களிடையே விசனத்தைத் தோற்றுவித்துள்ள நிலையில், நேற்று வடக்கு – கிழக்கு மறுவாழ்வு நிறுவனமும் மதுபோதைக்கு எதிரான இயக்கமும் கிளிநொச்சி மாவட்ட சர்வமதப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து கண்டனப் பேரணியொன்றை ஏற்பாடு செய்திருந்தன.

பேரணியின் நிறைவில் மதுபானசாலைகளை அகற்றுமாறு ஜனாதிபதிக்கான மகஜர் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட நிலையில், சட்ட நடவடிக்கையின் மூலமும் மதுபான சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனிடம் கோருவதற்கான மகஜரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் மதுபோதைக்கு எதிரான இயக்கத்தின் தலைவருமான எஸ். சுகிர்தனிடம் சர்வமதப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களால் கையளிக்கப்பட்டது.

# விவசாயிகளுக்கு இழப்பீடு; அமைச்சரவை அனுமதி



கடந்த காலங்களில் சீரற்ற காலநிலையினால் ஆறு வகையான பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதற்கமைய, நெல், சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் மற்றும் சோயா ஆகிய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்காக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை கொண்டு, இந்த இழப்பீடுகளை செலுத்துவதற்கு விவசாய மற்றும் நீர்பாசன அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜினாமா அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கின்றார் என நம்பகமாகத் தெரிய வருகிறது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரை இரண்டு இணைப் பொருளாளர்கள். ஒருவர் கனகசபாபதி. மற்றவர் கமலேஸ்வரன் (முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்).

இரு இணைப்பொருளாளர்கள் இருந்தாலும் கூட, கனகசபாபதியே யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இருந்து பொருளாளர் வேலையைச் செய்து வருகிறார். கட்சியின் கணக்கு வழக்குகள் எல்லாம் அவர் வசமே உள்ளன.

அவர் மாவை சேனாதிராஜாவின் தீவிர ஆதரவாளர். இப்போது கட்சித் தலைமைப் பதவி சேனாதிராஜாவிடமிருந்து கைநழுவிப் போகின்றமையைத் தடுப்பதற்கு பகீரதப் பிரயத்தன முயற்சிகளில் கனகசபாபதி ஈடுபட்டு வருகிறார். கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலருடனும் தொடர்பு கொண்டு வரும் 28ஆம் திகதி நடைபெறும் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்க அவர்களை அவர் தூண்டி வருகிறார்.

தமது முயற்சி வெற்றி அளிக்காது என்ற அதிருப்தியில் – ஆதங்கத்தில் – தான் கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து இந்த மாதம் 31ஆம் திகதியோடு – அதாவது இந்த வருடம் முடிவோடு – பதவியை இராஜினாமாச் செய்து விலகுகிறார் என்ற செய்தியை மற்றைய இணைப் பொருளாளரான கமலேஸ்வரனுக்கு அவர் தெரியப்படுத்தியிருக்கின்றார் என அறிய வந்தது.

ஆயினும் கட்சியின் தெளிவான கணக்கு வழக்குகளை கனகசபாபதி தம்மிடம் ஒப்படைக்காத வரை கமலேஸ்வரன் இந்தக் கணக்குப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று தெரிகிறது.

மாவை சேனாதிராஜா போல அவரது வலது கையான கனகசபாதியும் ராஜினாமா விவகாரத்தை ஒரு நாடகமாக முன்வைக்கின்றாரா அல்லது உண்மையில் பதவி விலகப் போகின்றாரா என்பதை வருடம் முடியும் போது நாம் காணலாம்.

கனகசபாபதி பதவியை ராஜினாமா செய்தாலும் கட்சியின் இதுவரையான வரவு – செலவுக் கணக்கு விவரங்களுக்குப் பதில் கூற வேண்டியவராக இருப்பார் என்பது மறுக்க முடியாத கடப்பாடாகும்.

\+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் பதவியில் தாம் தொடர்ந்து இருக்கிறார் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து சண்டப் பிரசண்டம் பண்ணும் மாவை சேனாதிராஜாவின் உண்மை நிலைமை யாது என்பதை அக்கட்சியின் கொழும்புக் கிளையின் புதிய தலைவர் சி.இரத்தின வடிவேல் விலாவாரியாக தெளிவுபடுத்தி இருக்கிறார்.

கட்சியின் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் எம்.பிக்கு அவர் நேற்று முன்தினம் இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

'திரு.சேனாதிராஜா அவர்களை கட்சித் தலைமை பதவியில் இருந்தும் மத்திய செயற்குழுவில் இருந்தும் நீக்குதல்' என்ற தலைப்பில் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தை அப்படியே கீழே தருகிறேன். இவை அவரின் கருத்தே தவிர என்னுடையவையல்ல:–

திரு.சேனாதிராஜாவினால் கட்சிக்குள் தோன்றியிருக்கும் நெருக்கடி வெறுமனே அவரது இராஜினாமாக் கடிதத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இராஜினாமா நாடகம் அவர்கட்சிக்குக் கொடுத்த நீண்ட தொடர் நெருக்கடிகளின் ஓர் அம்சம் மட்டுமே!

அவரது பிரச்சினை அவர் சம்பந்தப்பட்ட பின்வரும் அனைத்துப் பிரச்சினைகளுடனும் தொடர்புபட்ட ஒழுங்குமீறல் என்ற பின்னணியில் ஆராயப்படவேண்டியன.

1.கட்சி நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய பிரச்சினையின் ஆரம்பமே அவர்தான். கடந்த ஜனவரி 27ஆம் திகதி ஒழுங்காக நடைபெற்று, உத்தியோகத்தர்கள் தெரிவுகள் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, முடிவுகள் முறையாக அறிவிக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்டதன் பின் எந்தவித முகாந்திரமும் இன்றி அந்தப் பொதுச்சபைக் கூட்டத்தை முறைகேடாகவும் தான்தோன்றித்தனமாகவும் இரத்துச் செய்தமையால்தான் உறுப்பினர்கள் நீதிமன்றத்தை நாட வேண்டி ஏற்பட்டு குழப்பங்களுக்கான ஆரம்பப்புள்ளி இடப்பட்டது.

2.ஜனாதிபதி தேர்தலின்போது கட்சியின் முடிவை ஏற்றுக்கொண்டு அதனை அந்தத் தினம் காலையில் பத்திரிகைகளுக்கும் அறிவித்துவிட்டு, மதியம் சங்குக் கூட்டத்திற்கு ஆதரவாக கூட்டத்தில் பேசினார். பின்னர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெறவேண்டுமென்றார். அதன் பின்னர், தாம் ஒருவாக்கை சஜித்திற்கும், ஒரு வாக்கை ரணிலுக்கும் மூன்றாவது வாக்கை சங்கிற்கும் இட்டதாக பத்திரிகைகளை அழைத்துக் கூறினார்.

3.பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழரசுக் கட்சிக்கு எதிரான மிக மோசமான பிரசாரங்களுடன் போட்டியிட்ட 'மாம்பழச்' சின்ன சுயேச்சைக் குழுவுக்கு ஆசீர்வாதம் வழங்கி ஆதரவளித்தார்.

4.தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உச்சகட்டத்தில் இருந்தபோது கட்சித் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து ஊடகங்களுக்குப் பகிரங்கப்படுத்தி கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படக் காரணமானார்.

5.அந்த இராஜினாமாக் கடிதத்தைக் கூட யாருக்கு அனுப்பவேண்டும் என்ற நடைமுறையைக்கூட மறந்துவிட்ட ஸ்திர மற்ற மனநிலையால் பாதிக்கப்பட்டுள்ளமை அங்கே வெளிப்பட்டது.

6. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கட்சியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தைப் பகிஷ்கரித்துகட்சியையும்வேட்பாளர்களையும் அவமதித்தார்.

7. தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிலுமே கலந்துகொள்ளாது கட்சியின் பிரசார நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தார்.

8. தான் இராஜினாமாச் செய்ததை வசதியாக மறந்துவிட்டு நியமனப்பட்டியல் மூலமான ஓர் இடத்திற்குத் தன்னை ஒரு வருடமாவது நியமிக்கும்படி கேட்டதன் மூலம் ஒரு கனவானாக ஒழுகத் தவறினார்.

9. இப்போது அந்த இராஜினாமாக் கடிதத்தை மீளப்பெறுவதாக கடிதம் எழுதுகிறார். அதனைக்கூட ஒழுங்கான முறையில் அனுப்பும் மனநிலை இல்லாதவராக இருக்கிறார்.

10.செயற்குழுக் கூட்டங்களில் விடயங்களை மறந்தும் பொருத்தமில்லாமலும் நீண்ட நேரம் ஒரே விடயத்தையே திரும்பத் திரும்பப் பேசுகின்ற பலவீனமான மனப் போக்கு கடந்த சில வருடங்களாகத் தொடர்கிறது.

11. அத்தனை எதிர்க் கருத்துக்களைப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சென்ற செயற்குழுக் கூட்டத்தின்போது கடுந்தொனியில் தெரிவித்தபோதும் அவற்றைக் கிஞ்சிற்றும் கருத்திற்கொள்ளாது தலைமேசையில் வந்து அமர்ந்து கண்ணியமற்றவராக நடந்துகொண்டார்.

ஓர் இனத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கவேண்டிய ஒரு கட்சிக்குத் தலைமை தாங்குவதற்கான செயற்திறனோ அல்லது மனோ நிலையோ இல்லாது மனோநிலை பாதிக்கப்பட்டுள்ள போக்கு மிகத் தெளிவாகவே புலப்படுகின்ற நிலையில் தொடர்ந்தும் அவரைக் கட்சித் தலைவராக வைத்திருப்பதை தமிழர் நலன் விரும்பும் எவரும் அனுமதிக்க மாட்டார்கள்.

அவரது கடந்தகால சேவைகளை மதிக்கும் அதே வேளையில் தமிழர்களது எதிர்கால நலன் பாதிக்கப்பட அந்தச் சேவைகளைக் குறுக்கே நிறுத்தி, தமிழர் நலனும் கட்சியின் நலனும் பாதிக்கப்பட எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

எனவே தயவுசெய்து அன்னாரை கட்சியின் தலைமைப் பொறுப்பு உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புக்களிலிருந்து நீக்குவதற்கு உடனடியான செயல் முறைகளை, நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழர் நலன் கருதி வேண்டிக்கொள்கின்றேன்.

---

## ஓர் அழகான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

"இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கோலகலமாகக் கொண்டாடி வருகின்றனர். துன்பத்தில் இருந்து அனைவரையும் காப்பாற்ற இவ்வுலகின் அவதரித்த இயேசு கிறிஸ்து, ஒருபோதும் ஏழை, பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. அதனால்தான் அன்னார் கடவுளின் குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாளில் மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பர்களிடையே பிறக்கத் தேர்ந்தெடுத்தார்.

நத்தார் தினத்தில் அடிப்படை அர்த்தம், வாத பேதங்களை ஒதுக்கி, மனித நேயத்தின் பெயரால், மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் செயற்படுவதாகும்.

நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தமான அமைதியின் பின்னணியில் இருந்து இந்த நத்தார் பண்டிகையைக் கொண்டாடி வருவதை உளப்பூர்வமான மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிடுகின்றோம்.

சகல மக்களும் ஒன்றாக ஒரே நோக்கத்துடன் கூட்டுப் பொறுப்பாகக் கருதி நாட்டின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்த ஒரு காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம்,அமைதிமற்றும்நல்லிணக்கத்தால் பிணைந்து பூமியில் ஒரு புதிய விடியலின் அரவணைப்பை நாங்கள் அனுபவித்து வருகின்றோம். அந்தப் பிரகாசமே இயேசு நமக்குக் கொண்டுவந்த அன்பின் விடியலாகும்.

பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் இயேசு நாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஓர் அரசு என்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பாரியதொரு சமூக மாற்றமாகும். சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும். அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக 06



# அரிசி இறக்குமதிக்கான கால அவகாசத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

அரிசியை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிக்க தனியார்த் துறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தனியார்த்துறையினர் அரிசியை இறக்குமதி செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஓர் அழகான....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் நமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் “வளமான நாடு – அழகான வாழ்க்கையை” உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன், மென்மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் என்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார் தினத்தில் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுயநலம் மற்றும் தீங்கான போட்டியை சமூக கட்டமைப்பு தள்ளப்பட்டுள்ள போதும் , கிறிஸ்மஸில் வெளிப்படுத்தப்படும் மனித பண்புகளை வளர்த்து, சமத்துவத்தை மதித்து, மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், சகோதரத்துவத்தையும் சகவாழ்வையும் மதிப்பதன் மூலம், அந்த சமூகக் கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காக பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம்.

வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான அரசியல் கலாசாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஓர் அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம்.

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!” – என்றுள்ளது.

## வடக்கு ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கலந்துரையாடல் நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற இடமாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான இடமாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியதுடன், ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் கோரிக்கைக் கடிதம் ஒன்று ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது.



# மஹிந்தவுக்கும், நாமலுக்கும் உயிர் அச்சுறுத்தல்

## ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவிப்பு

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வு பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பு அரசியல் பழிவாங்களுக்காக நீக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டமை முறையற்றதொரு செயற்பாடாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இன்று பாதுகாப்பு ஏதுமின்றி மக்கள் மத்தியில் செல்வதற்கான சூழலை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதை மறந்து விடக்கூடாது.

இராணுவத்தினர் தமது சொந்த ஊர்களுக்கு சவப்பெட்டியில் செல்லும் யுகத்தை மஹிந்த ராஜபக்ஷவே முடிவுக்கு கொண்டு வந்தார். ஆகவே அவருக்கு பாதுகாப்பு வழங்குவது ஒவ்வொரு பிரஜைகளினதும் தலையாய கடமையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வு பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையிலும் இராணுவ பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும். இதனை அரசியல் பழிவாங்களாகவே குறிப்பிட வேண்டும்.




தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்படுகிறது. அரச வரப்பிரசாதங்களை பயன்படுத்துவதில்லை என்று குறிப்பிட்ட ஆளும் தரப்பினர் அரச சிறப்புரிமைகளை முழுமையாக பயன்படுத்துகிறார்கள். நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் தரப்பினருடன் கூட்டணி அமைக்க போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது எம்மை விட்டுச் சென்றவர்கள் இன்று அரசியலில் இருந்து காணாமல் போயுள்ளார்கள். அடுத்த தேர்தலில் எந்த தரப்பில் இருந்து போட்டியிடுவது என்பது அவர்களுக்கு கேள்விக்குறியாகியுள்ளது. ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிடுவோம்."– என்றார்.

# மருந்தாளர்களுக்கு வெற்றிடம்



மருந்தாளர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் கொழும்பு மாவட்டத் தலைவர் ஹேமந்த விஜேசேகர நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடளாவிய ரீதியில் சட்ட ரீதியாக மருந்தகங்களை முன்கொண்டு நடத்துவதற்கு பாரியளவில் மருந்தாளர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

அந்த நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் கூடிய விரைவில் மருந்தாளர்களை உள்ளீர்ப்பதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இதன் காரணமாகவே அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன், குறித்த துறையுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எதிர்காலத்தில் உரிய முறையில் மருந்தகங்களை நடத்துவதற்கான இயலுமை ஏற்படுத்தப்படுமென கருதுகின்றோம்.

இந்தநிலையில் உரிய பயிற்சியுடன் கூடிய மருந்தாளர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்."– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமாதானப் பிரபு வரட்டும்!

இன்று கிறிஸ்மஸ் தினம். சமாதானப் பிரபு இயேசு பிரான் அவதரித்த திருநாள்.

ஆண்டவனின் ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் முன்மாதிரியான வாழ்வும் நமக்கு உணர்த்தும் தத்துவம் - வாழ்க்கைப் பாடம் - யாது?

ஆண்டவன் - தேவன் - நினைத்திருந்தால் தம் குமாரனை ஏதேனும் ஓர் அரண்மனையில் பிறக்க வைத்திருக்கலாம். ராஜாவாக வாழ வைத்திருக்கலாம். சகல ஜனங்களையும்அவருக்குக்கீழ்படியுமாறு செய்திருக்கலாம். ஆனால், இந்தப் பிரபஞ்சத்தையே படைத்த அந்த இறைவன் தன் மகனை ஒரு தொழுவத்தில் பிறக்கவும், கந்தல் துணிகளால் சுற்றிக் கிடக்கவும் செய்தார். காரணம் இறைவன் தான் விரும்புவது எளிமையின் ரூபமே என்பதை உணர்த்த விரும்பினார். அந்த எளிமை இயேசுபிரானின் வாழ்நாள் முழுவதும் அவரோடு இருந்தது. அதுவே அவர் நமக்கு உணர்த்தும் முதல் பாடம். இறைவன் எளிமையின் வடிவானவன். எளியவர்களுக்கு மிக அருகில் இருக்கின்றவன். எளியவர்களுக்காக வாழ்கின்றவன். எளியவனாகவே இருப்பவன். இதைத் தான் அவரின் பிறப்பு இந்த உலகுக்கு உணர்த்த விரும்பியது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைச் சொல்லும் சுவிசேஷங்களை வாசியுங்கள். அதில் அவர் எப்போதும் எளிய மக்களோடே இருந்தார் என்பது புலனாகும். மீனவர்களும், கூலி வேலை செய்பவர்களும், நோயாளிகளும் எப்போதும் அவருக்கு அருகே இருந்தார்கள். அவரும் அவர்கள் மீது பிரியமாயிருந்தார்.

பெத்லஹேமின் ஒரு தொழுவத்தில் எளிமையாகப் பிறந்த இறைமகன், எளியோர்களிடமே முதலில் அறிமுகமானார். அவரது பிறப்பே இந்த உலகுக்கு மாபெரும் செய்திகளை உணர்த்தியது. எளிமை, அன்பு, பணிவு, மன்னித்தல், இறை வணக்கம், உண்மை, உறுதி என்ற இந்த ஏழு முக்கிய நற்குணங்களை இயேசு பிரானின் வாழ்க்கை நமக்கு உணர்த்தியது.

பாவங்களால் கனத்திருந்த மனிதர்களின் இதயம் புனிதம் அடையவும், இழி செயல்களால் அழியவிருந்த உலகத்தை அன்பால் காக்கவும் அவதரித்தார் இயேசு பிரான்.

அவர் வாழ்க்கைத் தத்துவம் நமக்கு வெறும் அடையாளங்கள் மட்டுமல்ல. ஏசுவைக் கொண்டாடுவதைப் போலவே அவருடைய போதனைகளை, நல்லொழுக்கங்களைக் கொண்டாட வேண்டும் என்பதே நன்மை விளைவிக்கும் மானுட தர்மம்.

அவருடைய தியாகங்களே உலகுக்கு முன்மாதிரியாக இருக்கும் பெரும் பாடங்கள். காய்க்காத அத்தி மரத்துக்கும் கருணை செய்த வள்ளல் இயேசு பிரான். மரணத்தின் வாயிலிலும் சத்தியத்தை கடைப்பிடித்த தேவசுதன் இயேசு. இறுதி நிமிடத்திலும் தன்னை இன்னலுக்கு ஆளாக்கியவர்களை மன்னிக்கச் சொல்லி தம் தந்தையிடம் பிரார்த்தித்த இணையில்லா அன்பு வடிவம் இயேசு பிரான்.

உலக சரித்திரத்திலே மிகப்பெரிய விஞ்ஞானிகளில் ஒருவராகிய தோமஸ் அல்வா எடிசனுடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. “நீங்கள் இதுவரை கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்ததாக நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்?” என்பதே அந்தக் கேள்வி.

இதற்கு அந்த மாபெரும் விஞ்ஞானி பதில் சொன்னார்:- “இதுவரை நான் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலே மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எனது பாவத்தில் இருந்து என்னை மீட்க இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் என்ற கண்டுபிடிப்பே ஆகும்”.

கிறிஸ்மஸ்விழாவை ‘ஒளி விழா’ என்ற பெயரில் கொண்டாடுவதை நாம் அறிவோம். ஏனெனில் இயேசு ஒளியாக உலகத்துக்கு வந்தார். “அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகுக்கு வந்துகொண்டிருந்தது” (யோவான் 1: 9) என யோவான் நற்செய்தியாளர் இயேசுவை அறிமுகம் செய்கின்றார்.

இன்று யுத்தப் பேரிருளில் மூழ்கிக் கிடக்கும் உலகுக்கு சமாதானப் பிரபு இயேசுவின் வழிகாட்டல் ஒளி தந்து அமைதி வெளிச்சத்தைக் காட்ட வேண்டும்.





# மெதடிஸ்த திருச்சபையின் ஒளிவிழா நிகழ்வு

பருத்தித்துறை கிறிஸ்துநாதர் மெதடிஸ்த திருச்சபையின் ஒளிவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.























# கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு

நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளத் தகுதியான நபர்களை அல்லது குடும்பங்களைத் தெரிவு செய்வதற்கான தரவு உள்ளீடு செய்யும் எண்ணீட்டாளர்களாகச் செயற்படவுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு உதவி பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



இந்தப் பயிற்சி செயலமர்வில் வளவாளராக புள்ளிவிபர உத்தியோகத்தர் நா.சுதந்திரன் கலந்துகொண்டு பயிற்சியை வழங்கினார்.

இந்தச் செயலமர்வில் எண்ணீட்டாளராகச் செயற்படவுள்ள வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துக் குட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயிற்சியைப் பெற்றனர்.

மேலும் இந்த நிகழ்வில் நிர்வாக கிராம அலுவலர் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவைப் பெற இரண்டாம் கட்டமாக விண்ணப்பித்தவர்களுக்கான வீடுகளுக்குச் சென்று தரவுகளைச் சேகரிக்கும் எண்ணீட்டுப் பணி விரைவில் அரசால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.








### மஹர சிறைச்சாலை மோதல்:

# குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக்கோரி மனு

11 கைதிகளுக்கு மரணத்தை ஏற்படுத்திய மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பான வழக்கு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு சட்டமா அதிபரால் அனுப்பப்பட்ட கடிதத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவத்தில் உயிரிழந்த கைதி ஒருவரின் மனைவி, இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வெலிசர நீதவான் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், அதன்பின்னர் மேற்படி சம்பவம் தொடர்பான நடவடிக்கைகளை முடிவுறுத்தி, கோப்புகளை மூடுமாறு அறிவுறுத்தி சட்டமா அதிபரினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சட்டமா அதிபரின் தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணானது எனக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், சட்டமா அதிபரின் கடிதத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.



# நத்தார் பண்டிகையை முன்னிட்டு 389 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

நத்தார் பண்டிகையை முன்னிட்டு 389 சிறைக்கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 4 பெண் கைதிகளும், 385 ஆண் கைதிகளும் அடங்குகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சிறு குற்றங்களுக்காகத் தண்டனைப் பெற்றுவரும் கைதிகளும், அபராதம் செலுத்த முடியாமல் நீண்டகாலம் சிறைத்தண்டனை பெற்றுவருபவர்களும் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதார சேவையை அடிப்படை உரிமையாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டம்

புதிய அரசமைப்பை வகுக்கும்போது, சுகாதார சேவையைப் பெறுவதற்கான உரிமையை மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, சுகாதார சேவைகளைப் பெறுவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டுமாயின் அதற்கு அவசியமான ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டும்.

தற்போது, அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அதன் நிறைவில் மக்கள் தங்களுக்குத் தேவையான இடங்களில் தமக்கான சுகாதார சேவைகளைப் பெற முடியும் என்ற உறுதிப்பாட்டினை அரசாங்கத்தினால் வழங்க முடியும்.



அதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை சுகாதார அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளின் தரம் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலை மற்றும் மருத்துவ நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரம் சுகாதார அமைச்சுக்கு உள்ளது.

இது தொடர்பில் முன்னதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களை சில தனியார் வைத்தியசாலைகள் மீறிவருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுமக்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும்போது எதிர்கொண்ட பல சிக்கல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் அங்கு அறவிடப்படும் கட்டணம் என்பன தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

இதற்காக சில தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடு நடந்துள்ளதா என்பதை கண்டறிய குற்றப்புலனாய்வு விசாரணை

ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசேட விசாரணையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விசாரணையை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா



அதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியத்தை முறைகேடாகப் பயன்படுத்தியவர்கள் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்குமாறு கோரி பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் நிதியைப் பாதுகாப்பதற்கான சட்டத்தரணிகள் அமைப்பினால் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# குஷ் ரக போதைப் பொருளுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது



சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்திவந்த சந்தேக நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

தாய்லாந்தின் – பேங்கொக் விமான நிலையத்திலிருந்து நேற்று அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அதன்போது விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் அவரது பயணப் பொதிகளிலிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ கிராம் 388 கிராம் எடையுள்ள குஷ் ரக போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கொழும்பைச் சேர்ந்த 30 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதியொருவர் எனவும், அவர் மேலதிக விசாரணைகளுக்காகப் போதைப்பொருளுடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளார் என்றும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை மண்ணில் புதிய வருகை தரும் கலக்கம்!

## கிறிஸ்து பிறப்போடு கலந்த ஓர் அலசல்




ம.பிரான்சிஸ்க,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்,
தொடர்பாடல் ஆசிரியர்.

கிறிஸ்து பிறப்பு என்றாலே நம் உள்ளத்தில் ஓர் ஆனந்தம். ஓர் அற்புத ஒளி நம் கண்களில் மின்னிடும். நாம் எண்ணுவதும் எண்ணாததும் நிகழ்ந்தேறும் கிறிஸ்து பிறப்புக் காலமிது. திருத்தந்தை இந் நாளை அருளின் நாள், அமைதியின் நாள், அன்பின் நாள் என அழகாகச் சொல்கிறார். கடவுளின் அருள் மனித உடலாக இம்மண்ணில் பிறந்த நாள். அமைதியின் அரசர் சத்திரம்கூட இல்லாது ஏழைக்காய் மலர்ந்தநாள்.

கிறிஸ்து பிறப்பு பெருமகிழ்ச்சியை அள்ளித்தருகிறது. ஆனால் இன்று இலங்கையில் பல மனிதர்களுக்கு இது கலக்கத்தைத் தருகிறது என்கின்றனர் திற னாய்வாளர்கள்.

இங்கு நாம் எடுக்கும் 'கலக்கம்' மகா ஏரோது அரசன்



ஆட்சியில் நிகழ்ந்ததை முதலில் நோக்குகின்றோம்: பைபிளில் மத்தேயுவின் நற்செய்தியானது யூதர்களின் அரசர், யேசுவின் பிறப்பைக் கூறிய ஒரு விண்மீனைப் பின்பற்றி கிழக்கிலிருந்து வந்த ஞானிகளின் பயணத்தை விவரிக்கிறது. ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரைக் வணங்க வந்திருக்கிறோம என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று.(மத்தேயு:2:2-3)

இந்த ஏரோது பகைமையுணர்வு கொண்டவன். ஏரோது முறையான வகையில் அரசனாகப் பதவி ஏற்கவில்லை. அவன் பல சூட்சிகளைச் செய்தவன் ஊழல் மோசடிகளைச் செய்து பலரைக் கொலை செய்து அரச பதவியை ஏற்றவன். இதனால் இயேசு பிறக்கும்போது தன்னியல்பை இழந்தவன் தர்க்கத்தை இழந்தவன் சிந்திக்கும் திறன் பாதிக்கப்பட்டு விபரீத தீர்மானங்களை நிறைவேற்றியவன் என வரலாறு கூறுகின்றது. ஆகவே வேறு ஓர் அரசன் வருகை தந்துள்ளார் என கேள்வியுற்றதும் தனக்கு தற்காப் பின்மையை உணர்ந்து கலங்கினான்.

இங்கு நாம் எடுக்கும் இரண்டாவது 'கலக்கம்' ஏரோதின் அரண்மனைக்கு ஞானிகளின் வருகை கலக்கத்தை ஏற்படுத்தியதுபோல தற்போது இலங் கையில் மற்றொரு நபர் அமைதியாக அரண்மனைக்கு வந்ததும் நிகழ்ந்திருப்பது. அவர்தான் மாண்புமிகு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க. அவர் அதிகாரத் துக்கு வருகைதந்ததும் அரசங்கத்தின் பலதலைவர் களுக்குக் கலக்கம் வந்தது. இந்தக் கலக்கம் மர்மங்கள, மறைசூழ்ச்சிகள் மற்றும் உட்சிக்கல்களை உட்குடைந்து ஆராயப்போகிறது என்ற பேரச்சமாக ஊழல்வாதிகள் மத்தியில் இன்று மாறிவருகின்றது.

அரச தலைவர் ஜனாதிபதி கவர்ந்திழுக்கும் மற்றும் இராஜதந்திரமான செல்வாக்கு வலைகளை நெசவு செய்யும் சாமர்த்தியம் கொண்டவர். அவர் ஒரு திடமான முழுஉலகமும் முழுக்கவனத்தையும் கொண்டுள்ள சிம்மாசனத்தில் தனது பார்வையை அமைக்கிறார். அதிகாரத்துக்கு அவர் வந்ததும் அது ஆண்ட வர்க் கத்தினருக்கு அதிர்ச்சி அலைகளை அனுப்பியது. அவர்கள் தாங்கள் அமைத்துள்ள ஒழுங்கு மற்றும் மரபுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக அவரை கண்டு கலங்குகின்றனர் எனலாம்.

அரசியல் அரங்கில் அரச தலைவர் ஜனாதிபதியின் விண்மீன் உயர்ந்து கண்சிமிட்டத் தொடங்க எமது ஏரோதுகளின் பிடியில் இருந்த எமது நாடு தளரத் தொடங்கி விட்டது. இங்கு உள் ஒன்று வைத்து புற மொன்று பேசி புன்முறுவலோடு சூட்சிசெய்தால் அவர்களும் ஏரோதுகள் தான். எண்ணம்போல் சொல் இவைகள் இரண்டும்போல் செயல். இதுதான் ஒருவனைத் தனக்குள் ஒருமிக்கும். தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். எண்ணங்களை நேரானதாக்கி சொல்லையும் செயலையும் ஒன்றாக்கினால் ஆட்சி நீடிக்கும் என்கிறது பைபிள்.

ஏரோது பாதுகாப்பின்மையை கையாள எடுத்துக் கொண்ட ஆயுதம் அரச பயங்கர வாதக் கொலைகள். அதிகார நாற்காலியை தக்கவைக்க எடுத்துக்கொண்டது கொடுங்கோண்மை. அதிகாரத்தைச் சுவைத்த ஏரோது அதைத் சூட்சிகள் செய்தும் ஊழல்கள் செய்தும் தம்வசப்படுத்திக் கொண்டு துரோகத்தால் அதன் பலத்தை விரிவுபடுத்தினான். அச்சந்தர்ப்பத்தில் அந்த ஓர் இரவில் ஏரோதின் அரண்மனைமீது நிலா திகில் ஏற்படுத்துகின்ற பயங்கரமான பிரகாசத்தை வீசியது.

தொடர்ச்சி▼

# இலங்கை மண்ணில் புதிய வருகை தரும் கலக்கம்!

தொடர்ச்சி▲

ஞானிகள் அப்போது தங்கத்தால் ஆன ஆடைகளை அணிந்து சிங்காரமான தோற்றம் கொண்டு பரிசுகளைச் சுமந்து ஏரோதின் அரண்மனைக்கு வந்தார்கள்.

அவர்களின் வருகை ஏரோதுக்கும் அவர்களைப் பார்த்த அனைவருக்கும் கடும் கலக்கத்தை ஏற்படுத்தியது. ஞானிகளின் வருகை ஏரோதின் உலகத்தை தலைகீழாக மாற்றியது. அவனது இதயத்தில் பேரச்சமும் கலக்கமும் பற்றிக்கொண்டது. ஏரோது இரும்புக்கரம் கொண்டு ஆட்சி நடத்தியவன். அவனது இராச்சியத்தின்மேல் அசைக்க முடியாத கட்டுப்பாட்டைக் கொண்டு ஆட்சி செய்யும் ஒரு வல்லமைமிக்க ஆட்சியாளர். செழுமையால் நிறையப்பெற்று ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். அவனது அரண்மனைஞுபவ் பரந்த ஒரு நகரத்தை கீழே கொண்ட பசுமையான ஒரு மலையின் மீது அமைந்திருந்தது. அது அவனின் அதிகாரத்தின் சின்னமாக இருந்தது.

ஏரோது தனது சிம்மாசன அறையில் இருந்து ஞானிகளை வாழ்த்தியபோது ஓர் அமைதியின்மை தன்னை முழுவதும் ஆள்கொள்வதாக உணர்ந்தான். ஞானிகளின் கண்கள் அவனது பலத்தைத் துளையிடுவதுபோல் அவனுக்குத் தோன்றியது என்கின்றனர் ஆய்வாளர்கள். அது அமைதியற்ற நிலையுடன் அவனது ஆன்மாவின் ஆழத்தைப் துளைத்துப் பார்த்தது. அந்தவேளை ஏரோதின் ஆட்சியின் போக்கை என்றென்றும் மாற்றியமைக்கும் நகர்வைக் குறித்து ஞானிகள் அமைதியான தொனியில் பேசினார்கள். இரவு கடந்ததும் ஞானிகளின் வருகை பற்றிய கிசுகிசுக்கள் ஏரோதின் இராட்சியம் முழுவதும் காட்டுத்தீயைப்போல பரவியது.

ஏரோதின் குடிமக்கள் மத்தியில் பயத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் தூண்டியது. வரவிருக்கும் அழிவு மற்றும் தெய்வீக பழிவாங்கல் பற்றிய வதந்திகள் தெருக்களில் சுழன்று அது மக்களின் இதயங்களில் அமைதியின்மை மற்றும் அதிருப்தியை ஏற்படுத்தியது. நாளுக்கு நாள் ஏரோதின் அதிகாரத்தின் மீதான பிடி பலவீனமடைந்தது. பண்பாடு, பொருளாதாரம் உறுதியற்ற தன்மையை நோக்கி நகர்ந்தது.

குழந்தையைத் தானும் சென்று வணங்குவேண்டும் என மோசமன பொய்யார்வம் காட்டி குழந்தையின் இருப்பிடத்தை அறிந்ததும் தனக்குத் தெரிவிக்குமாறு ஏரோது ஞானிகளிடம் கோரினார். ஞானிகள் ஒரு கனவில் எச்சரிக்கப்பட்டபோது ஏரோதிடம் திரும்பவில்லை.இதனால் ஏரோது பெத்லகேம் மீது தனது கோபத்தைக் கட்டவிழ்த்து விட்டான். நகரத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் உள்ள இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளையும் கொன்றான். இந்த மிருகத்தனமான செயல் பயம் மற்றும் பாதுகாப்பின்மையால் உந்தப்பட்ட ஒரு கொடுங்கோலனாக அவனது பாரம்பரியத்தை உறுதிப்படுத்தியது.

ஏரோதின் ஆளுகைப் பாணியானது சர்வாதிகாரத்தின் கலவைகளால் வகைப்படுத்தப் பட்டது. எதேச்சதிகார ஆட்சியின் அடையாளமான ஏரோது அசைக்க முடியாத நம்பிக்கையை தன்னில் மட்டும் வைத்திருந்தார். சீர்திருத்தமும் உறுதித்தன்மையும் பற்றிய அவனது ஆரம்பகால வாக்குறுதிகள் அவன் அதிகாரத்தை ஒருங்கிணைத்தவுடன் சிதறடிக்கப்பட்டன. அவனது இந்த சகாப்தம், சுதந்திரமான பேச்சு, மக்களின் சிவில் உரிமைகள் ஆகியவற்றில் கடும் தடையைக் காட்டியது. அவனது தலைமை அரசியல் சுத்திகரிப்பு, கருத்து வேறுபாட்டுக்கான கடுமையான அணுகுமுறை நிலவும் அவநம்பிக்கைச் சூழ்நிலையால் குறிப்பிடப்பட்டது.

எந்த வகையான எதிர்ப்பையும் கடுமையான விளைவுகளை சந்திக்கும் ஒரு நிலையாக மாற்றினார். இதனால் ஏரோது யூத குடிமக்கள் மத்தியில் செல்வாக்கற்றவனாகின்றான். அவனது சிம்மாசனத்துக்குப் பொருத்தமான போட்டியாளர் பற்றி ஞானிகளின் செய்தி ஏரோதின் சித்தப்பிரமையைப் பற்றவைத்தது.

திணையளவும் சறுகாத ஞானிகளின் தீர்க்க தரிசனங்கள் ஏரோதின் மனதை கனமாக அழுத்தியது. ஒரு காலத்தில் இருந்த அவனது அசைக்க முடியாத நம்பிக்கையின் மீது சந்தேகத்தின் நிழல் எட்டிப்பார்த்தது. ஒரு காலத்தில் அவனது ஆட்சியை இயக்கிய பயம் இப்போது உள்நோக்கித் திரும்பியது. அவனைச் சித்தப்பிரமை மற்றும் பாதுகாப்பின்மை விழுங்கியது. ஞானிகளின் வார்த்தைகளால் வேட்டையாடப்பட்ட மனதுடன் நாளடைவில் ஏரோது தனது கிரீடத்தைக் கைவிட்டு அரியணையிலிருந்து இறங்க நேர்ந்தது.

புதிய அரச தலைவர் ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததும் மக்கள் மனங்களில் பழைய நினைவுகள் கலர்பட ரீல்களாக ஓடத்தொடங்கின. முன்னரான ஆட்சியில் இருந்த இருண்ட பக்கங்களை விரைவாக வெளிப்படுத்தின: விமர்சகர்கள் மௌனமாக்கப்பட்டவிதம், அரசியல் எதிர்கருத்துடையோர் மர்மமான முறையில் மறைக்கப்பட்டவிதம், ஊடகங்கள் கடுமையான கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டவிதம், எதிர்ப்பாளர்களுக்கு எதிரான அரச ஆதரவு வன்முறை குற்றச்சாட்டுகள் விதிக்கப்பட்டவிதம், தான் வாயால் சொல்வதற்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டும் என்னும் விதிகளை விதித்த விதம், வெகுசன நியாயப் போராட்டங்களுக்கு வலுக்கட்டாயமாகத் தண்ணீர் பாச்சி அடித்தவிதம், ஊரடங்குச் சட்டம் சாதாரணமாகிவிட்டு விதம், சுய நலத்துக்காகப் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியவிதம், வறிய சாதாரண இலங்கையர்களுக்குத் துன்பங்களை ஏற்படுத்தியவிதம் என எல்லாமே வெளிச்சத்துக்கு வரத் தொடங்கின. இது இதனுடன் தொடர்புடைய நீலம், வெள்ளைஞுபவ் பச்சைஞுபவ் சிவப்பு அரசியல் சார்புடைய கட்சியாளர்களிடையே நடுக்கத்தையும் மக்களிடையே ஆர்ப்பரிப்பையும் ஏற்படுத்தியது.

அனைத்தையும் தத்தம் ஆட்சியின்கீழ் உட்படுத்த வேண்டும் எனத் துடித்து அதிகாரத் துஷ்பிரயோகங்கள் ஏற்படுத்தியமை கண்கூடு. ஏரோது போல் நாம் மேலே கூறிய இந்த அரசியல் சார்புடைய நிறங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்த விஜயின் வேட்டக்காரன் படத்தில் ஒரு வேடத்தில் வேதநாயகம் பயத்தை கையிலெடுத்ததைப் போல் பயத்தை ஆயுதமாக்கி

தொடர்ச்சி▼

# இலங்கை மண்ணில் புதிய வருகை தரும் கலக்கம்!

தொடர்ச்சி▲

முன்றியடித்தனர். நாளடைவில் ஏரோதைப்போல் இந்த நிறங்களும் தமது சிம்மாசனத்தை இழக்க நேரிடும் என்ற பயம் மறைசூட்சிகளை – அட்டு ழியங்களை– ஆரங்கேற்றி பல இளைஞர்களை கதியற்றோராக்கின. இது பாதுகாப்பின்மை சனநாயக சுதந்திரத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும் கொள்கைகளுக்கும் செயல்களுக்கும் வழிவகுத்தது.

நாம் மேலே குறிப்பிடும் இந்த நிறங்கள் தங்கள் குடிமக்களின் நல்வாழ்வைவிட தாங்கள் மட்டும் அழிந்துபோகும் துருப்பிடிக்கும் செல்வங்களை சேர்த்து மக்கள் சத்திரங்களிலும் சாவடிகளிலும் கொட்ட கைகளிலும் தீவனத் தொட்டிகளிலும் நாள்களை கழிக்க வித்திட்டனர். கம்பனிகளிலும் காப்பற் றோட் டுக்களிலும் களிப்புலா சென்றனர். மக்கள் வீதியோரம் விழுந்த விதைகளாக மிதிபட்டனர்.

ஏரோது கட்டவிழ்த்துவிட்ட பயம் அப்பாவிகளின் படுகொலை அவனது கொடுங்கோண்மை யூதேயாவில் ஒரு நிலையான வடுவை ஏற்படுத்தியது. அதேபோன்று இந்த நிறங்களின் ஆட்சியின்கீழ் இலங்கை ஓர் உடைந்த சமூகத்தை எதிர்கொண்டது. ஆட்சியில் ஆழமான அவநம்பிக்கையும் சர்வதேச நம்பகத் தன்மையையும் இழந்து அழியாத வடுவை ஏற்படுத்தியது. எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று தெரியாமல் மக்கள் மூச்சுத் திணறினர்.

துடிப்பான கலாசாரம் கொண்ட நமது இலங்கையில் பொருளாதார உறுதியற்ற தன்மையாலும் பொது அமைதியின்மையாலும் வரலாறு முழுவதும் அதிகாரப் போராட்டங்களாலும் அரசியல் நிச்சயமற்ற தன்மை யாலும் பயத்தாலும் கடுமையான நடவடிக்கைகளாலும் துவண்டுபோன மக்கள் ஒரு புதிய ஆட்சியாளரை எதிர் பார்த்தனர்: ஏரோதைப் போலவே மக்களை ஏமாற்றிய இந்த சூட்சியாளர்கள் பலர் மன்றப் பக்கமே போகமுடியாத அளவுக்கு மக்கள் ஏற்ற முடிவை எடுத்தனர்.

நீண்டகால அரசியல் உயர் அடுக்கின்மேல் பொது மக்களின் ஏமாற்றத்தைச் சரியாகப் புரிந்து, தங்களை வழிநடத்த ஒரு தலைவரை மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதைச் சாதுரியமாகப் புதிய ஜனாதிபதி வடி வமைத்தார். அவரது பிரசாரம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் கடந்த காலத்திலிருந்த ஓர் இடைவெளி, மேலே நாம் குறிப்பிடும் நிறங்களின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு விடையளித்தது.

இந்த நிலைப்பாடு மாற்றத்தை விரும்பிய பலரிடம் எதிரொலித்தது. எனவே மக்கள் ஆணை வழங்கினர். அநுர அரச தலைவரானார். ஒரு மாற்றத்தை உணர்ந்த மக்கள் அவரது புதுப்பித்தலாலும் மாற்றமுள்ள வாக்குறுதிகளாலும் ஈர்க்கப்பட்டு புதிதாகப் பதவிக்கு வந்தவர் பின்னால் அணிதிரளத் தொடங்கினர். புதிய ஜனாதிபதயின் கல்விமான்கள் அரண்மனைக்கு அழகு சேர்த்தனர். இதனால் அவர் உலகத்துக்கு ஒரு வலிமைமிக்க ஆட்சியாளர் எனத் தன்னைத் திடப்படுத்தினார். அவர் தனது தோழர்களுடன் சேர்ந்து வரவிருக்கும் ஊழல் எதிர்ப்புப் புயலுக்கு புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தினார். அவர் அதி காரத்திற்கு வந்தமை ஜனரஞ்சகச் சொல்லாட்சி, நம்பிக்கைக்கு உரிய பரந்த சீர்திருத்தங்கள் ஊழலுக்கு முற்றிலுமாக முற்றுப்புள்ளி வைக்கின்ற செயல் துணிச்சலான முன்முயற்சிகள் மற்றும் வெகுசனங்களின் கற்பனைகளைக் கைப்பற்றும் பார்வை நோக்குகள், மக்களின் மனங்களில் தலைமுறைகளாக உணராத நம்பிக்கை உணர்த்துகின்றன.

ஊழலுக்கு ஒரு தொடர் விசாரணைகள் தொடங் கப்பட்டன. இந்த விசாரணைகள் நாம் மேலே குறிப்பிட்ட இந்த நிறங்களின் ஆட்சிகளின் ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள், அதிகார துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்தி நீதியைக் கொண்டுவருவதை நோக்கமாக்குகிறது. விசாரணையாளர்கள் நீதியை மேம்படுத்தி இந்த நிறங்களுக்குப் பயத்தைக் காட்டுகின்றனர். பொய் குற்றச்சாட்டுக்கள், வேட்டைகள் மற்றும் அரசியல் பழிவங்கல்கள் பற்றிய குற்றச் சாட்டுகள் வெளிப்பட்டன. இதனால் பலசூட்சியாளர்கள் கலக்கம் கொண்டுள்ளனர்.

புதிய ஜனாதிபதியின் வருகை எம்தேசத்தைக் குணப்படுத்த உழைக்கின்றது. பிரிவினைகளை அகற்றி சமாதானத்தையும் சகோதர வாழ்வையும் நல்லி ணக்கத்தையும் இலட்சியங்களாக வளர்த்தெடுக்கின்றது. ஏரோது கையாண்ட பயத் தந்திரங்கள், ஒடுக்கு முறைக்குப் பதிலாக புதிய ஜனாதிபதி உரையாடலை மதிக்கும் அரசியல் அமைப்பின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றார். அதேபோன்று அவர் நீதிக்கான வேட்கையை பழிவாங்கும் அரசியலுக்குள் கொண்டு செல்லாமல் பணி புரிகின்றார். நல்ல விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஓர் அரசாங்கத்தை உருவாக்கினார். இலங்கையை முன்னேற வேண்டும் என்ற வேட்கையால் வெளிப்படைத்தன்மை – பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலியுறுத்தும் அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப உழைக்கின்றார். அர்த்தமுள்ள உரையாடலில் குடிமக்களை ஈடுபடுத்துவது, சீர்திருத்தங்கள் நியாயமான முறையில் செயல் படுத்தப்படுவதை உறுதி செய்வது அரசியல் அமைப்பில் நம்பிக்கையை வளர்க்கும் செயற்பாடுகளைச் செய்ய முனைகின்றார். இது மக்களிடையே போற்றுதலையும் சூட்சியாளரிடையே கலக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

புதிய ஜனாதிபதி வரலாற்றைப் பற்றிக் கொண்டு பிரகாசமான எதிர்காலத்துக்காக அனைத்துக் குடிமக்களின் குரல்களையும் மதிக்கும் ஓர் அரசியல் நிலப்பரப்பை வடிவமைப்பதில் முனைகின்றார். கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் சமரசம் செய்வதற்கான முயற்சிகளுக்கு முன்னாள் தவறுகளை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல் இலங்கையர்கள் மிகவும் ஆழமாக விரும்பும் ஜனநாயகம் சகோதரத்தம் சமாதானம் நீதிநெறிஎபவ் விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் செய்கின்றார். வினைத்திறனான ஆட்சி நிர்வாகததுக்குப் பரிவிரக்கம் வெளிப்படைத் தன்மை மற்றும் பொது நன்மைக்கான அர்ப்பணிப்பு தேவை என உணர்ந்து 20கோடி சேமித்து பொது நலனுக்கு வழங்கியமை ஓர் எடுத்துக்காட்டு. கொடுங்கோ காண்மைக்கு எதிராக விழிப்புடன இருக்க வேண்டியதன் அவசியத்தையும் ஒரு நீதியான சமூகத்தைப் பின்தொடர்வதன் அவசியத்தையும் விளக்குகின்றார்.

இதனால் ஏரோதின் கலக்கம் மற்றும் இலங்கையில் புதிய ஜனாதிபதியின் வருகையால் வந்த கலக்கம்

தொடர்ச்சி▼

# இலங்கை மண்ணில் புதிய வருகை தரும் கலக்கம்!

தொடர்ச்சி▲

காலத்தின் மூடுபனியில் மறைந்து விடாது தைரியம், இலட்சியம், சவால்கள், வாய்ப்புகள் நிறைந்த உலகில் அதிகாரம் மற்றும் பெருமைக்கான காலமாற்றப் போராட்டத்தை விட்டுச்செல்லும்.

கட்டுப்படுத்தப்படாத அதிகாரத்தின் ஆபத்துகள் பற்றிய எச்சரிக்கை நீதிக்கான நீடித்த போராட்டத்தையும் சிறந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் நெறிமுறை தலைமையின் முக்கியத்துவத்தையும் நினைவூட்டும். தன் தொண்டர்கள் தன்னைப் புடை சூழ்ந்து வரவேண்டும். வாழ்த்து கோசங்கள் எழுப்ப வேண்டும். தன் புகழ்பாட வேண்டும். தன்னைத் தெய்வமாகக் கருதி வழிபடும் தான் தோன்றித்தனம் போன்ற விளம்பரப் பிரியர்களாகப் புகழ் விரும்பாமல் மாற்றுச் சிந்தனையை புரட்சிச்சிந்தனையை அவர் முன்வைக்கிறார்.

அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கு முறையைக் கையாளும் நம் தலைவர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்துகின்றார். எனவே ஆனந்த மழையில் நம் நாடு மகிழ அநுர வருகின்றார் என்று நாம் மட்டற்ற மகிழ்சி அடைய ஊழல் குறும்பர்கள் கலக்கத்தால் பேரச்சத்தினுள் செல்கிறார்கள். நம் இன்பத்தில் மட்டுமல்ல மாறாக நம் துன்பத்திலும் நம்முடன் இருப்பார் என்று எண்ணலாம். கணினித் தகவல் களைவிட களத்தகவல்களை எடுக்க ஒருவர் இருக் கின்றார் என உணரலாம்.

இயற்கைச் சீற்றங்கள் மத்தியில் நம்மை நெருங்கி வருவார் என நம்பலாம். வன்முறைகளையும் கலவரங்களையும் பயங்கரவாதத்தையும் தூண்டிவிட்டு குளிர்காயும் தலைவர்கள் சட்டங்களைக் கையில் எடுத்தும் புதிய புதிய சட்டங்களைப் பெருக்கிக் கொண் டும் உண்மையை ஊமையாக்கி நீதியைச் நிர்மூலமாக்கி தான் நினைப்பதும் சொல்வதும் செய்வதும்தான் சரி என்று நியாயப்படுத்திச் சாதித்த நம்நாட்டுத் தலைவர்கள் மத்தியில் – ஏழைகளின் வயிற்றுப் பசியைக்கூட அரசியலாக்கி கஞ்சித் தொட்டியாக்கி பிரியாணி வாக்குக்கு மதுப்போத்தல் என்று தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் தலைவர்கள் மத்தியில் பேதுருவிடம் உனது வாளை அதன் உறையிலே திரும்பப்போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனை வரும்வாளால்அழிந்துபோவர்.ஞுநரழவ(மத்தேயு26:52) என்று இயேசு எச்சரிக்கும் வார்த்தையைப் புரிந்து அவர் செயல்படுத்துவார். உண்மையை எடுத்துரைப்தே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகுக்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். (யோவான்18:37) என்று இயேசு விடுக்கும் அறை கூவலை சீர்தூக்கிப்பார்த்துச் செயற்படுவார் என்பது நிச்சயம்.

பாலன் இயேசு பிறப்பை இந்த வருடம் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதுபோல் புதிய அரச தலைவருடைய வருகை வந்திருக்கின்றது என எல்லாத் தமிழ் மக்களும் அவரை ஒரு சிங்களத் தலைவராக கொண்டாடுகிறார்கள். இது சரித்திரத்தில் நடைபெறாத ஒன்று. இயேசு பிறப்பு புதிய சிந்தனைகளைக் கொண்டுவரவதுபோல புதிய அரச தலைவருடைய நீதிக்கான போரளித்துவ அனுபவம் தமிழ் மக்களின் போரளித்துவ பின்னணியைப் புரிந்துகொண்ட மனப்பாங்குடன் எல்லாவற்றையும் கொண்டுவந்துள்ளது என்கின்றர் திறனாய்வாளர்கள்.

மாமன்னன் நெப்போலியன் கூற்று: ‘நானும் அலெக்சாண்டரும் ஆயுத பலத்தால் அடக்கி ஆளமுயன்றோம். எங்கள் அரசு நிலைக்கவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து அன்பினால் ஆட்சி செய்கின்றார். அவரது அரசு என்றும் நிலைத்திருக்கும்.’ ஓர் அரசனுக்கு வெற்றி தருவது ஆயுத பலமல்ல. நீதி நெறி தவறாத ஆட்சி முறையே. அதனால்தான் மன்னன் சாலமோனுக்காகத் திருப்பாடல் ஆசிரியர் இப்படி மன்றாடுகிறார்: ‘கடவுளே’ அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும். அரச மைந்தரிடம் உமது நீதி விளங்கச் செய்யும். அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக. உம்முடையவரான எளியோர்க்கு நீதித்தீர்ப்பு வழங்குவாராக! (திருப்பாடல்.72:1-2). எனவே வருகைத ந்திருக்கும் எமது புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்காக நாமும் மன்றாடுவோம்.





# நத்தார் தினத்தின் அர்த்தத்தை புரிந்து நாட்டுக்காக நாங்கள் ஒன்றிணைவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நத்தார் செய்தியில் தெரிவிப்பு

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாக புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளது. இதன் அர்த்தத்தைப் புரிந்து நாட்டுக்காக நாங்கள் ஒன்றிணைவோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள் நத்தார் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயம் சார்ந்த சமூகத்துக்கு நம்பகமான அடித்தளத்தை அமைத்தது. அன்று இயேசு நாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய நமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது.

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகவும் உள்ளது.

இதன் அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது. இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரதத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும்.

இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்கு பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும்.

இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் மகிழ்ச்சியான இனிய நத்தார் வாழ்த்துக்களை மனமார வாழ்த்துகிறேன்.– என்றுள்ளது.



# வறுமையிலும், நோயிலும துன்பப்படுவோர் ஈடேற்றம் பெற இறைவன் அருள் புரிவார்!

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

எமது நாட்டில் எமக்கு இருக்கக்கூடிய சவால்களுக்கு மத்தியில் பல வகையான நெருக்கடிகளுக்கு மத்தியில் இயேசு நாதர் எமக்கு என பிறக்கின்றார்.

வறுமையிலும், நோயிலும் துன்பப் படுவோர் ஈடேற்றம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ இறைவன் துணை புரிய வேண்டும்.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

கிறிஸ்துமஸ் என்று நாம் அழைக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவை இன்று அகில உலகிலும் கொண்டாடுகின்றோம்.

கிறிஸ்து பிறப்பு விழா எவ்வளவு முக்கியமான ஒரு பெருவிழா என்று கணிப்பதற்கு காரணம் மனித வரலாற்றில் இயேசுநாதர் இவ் உலகில் பிறந்தது வரலாற்றிலேயே இருக்கக்கூடிய ஒரு பெரிய நிகழ்வாக இருந்ததினால் தான் அவ்வாறு பார்க்கும் போது இறைவன் மனிதன் மீது கொண்ட ஆழ்ந்த அன்பினாலே தன்னுடைய மகன் இந்த உலகுக்கு வந்து மக்களுக்கு ஒளியையும், அமைதியையும் அழிக்க வேண்டும் என்று அவர் திட்டமிட்டார்.

அதன்படியே நம் ஆண்டவர் இயேசு இவ் உலகில் பிறந்து எமக்கு எல்லாம் ஒளியாகவும், அமைதியாகவும் இருக்கின்றார்.

2024 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் விழா அனைவருக்கும், அமைதியையும் ஒளியையும் ஒன்றிப்பையும் தர வேண்டும் என்று ஆசிக்கிறேன்.

எமது நாட்டில் எமக்கு இருக்கக் கூடிய சவால்களுக்கு மத்தியில் பல வகையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயேசு நாதர் எமக்கு எனப் பிறக்கின்றார். எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றார். உலகம் முழுவதும் அவருடைய மகிழ்ச்சி கிடைக்கப்பெற வேண்டும்.

மக்கள் ஒளியில் வாழ வேண்டும். இருள் எல்லாம் அகற்றப்பட்டு வறுமையிலும், நோயிலும் துன்பப் படுவோர் ஈடேற்றம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ இறைவன் உங்களுக்கு அருள்வாராக.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.




# எமது தேசத்தின் முன்னேற்றத்தை நோக்கி பணியாற்ற அனைவரையும் அழைக்கின்றேன்

## வடக்கு மாகாண கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

புத்தாண்டு நெருங்கி வரும் இந்த வேளையில், வடக்கு மாகாணத்துக்கும் எமது தேசத்துக்கும், அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு,

கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாலன் பிறப்பை நாம் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாடுகையில் கிறிஸ்துமஸின் உண்மையான உணர்வை நினைவில் கொள்வோம்.

அன்பை – கருணையைப் பரப்புதல், மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல், மற்றவர்களுக்கு இரங்குதல் – உதவி செய்தல் மற்றும் அனைத்து சமூகங்களிடையேயும் நல்லிணக்கத்தை வளர்ப்பது என்ற எண்ணங்களை மனதிலிருத்துவோம்.

இந்த மகிழ்ச்சியான பண்டிகையை நாம் கொண்டாடும்போது, எம்மைச் சூழ்ந்திருப்பவர்களில் உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு நம் இதயங்களையும் கைகளையும் நீட்டுவோம்.

புத்தாண்டு நெருங்கி வரும் இந்த வேளையில், வடக்கு மாகாணத்துக்கும் எமது தேசத்துக்கும், அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

கிறிஸ்மஸ்ஸின் ஒளி நம் பாதைகளை வழி நடத்தட்டும், மேலும் இந்தப் பண்டிகையின் ஆசீர்வாதங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியையும் நிறைவையும் கொண்டு வரட்டும்.
– என்றுள்ளது.

# ஜல்லிக்கட்டு போட்டிக்கான நெறிமுறைகள் வெளியாகின



தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரத்திற்கு அடுத்தபடியாக உசிலம்பட்டி அருகே உள்ள தொட்டப்பநாயக்கனூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு பிரசித்தி பெற்றது.

இந்நிலையில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

■ மாவட்ட கலெக்டரிடம் அனுமதி பெறாத அமைப்பாளர்களுக்கு ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி வழங்கக்கூடாது.

■ ஜல்லிக்கட்டின்போது காளைகளை துன்புறுத்துவதை தவிர்க்க வேண்டும்.

■ ஜல்லிக்கட்டு போட்டி நடத்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

■ ஜல்லிக்கட்டு போட்டி முழுவதும் வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# தமிழக மீனவர்கள் கைது, தாக்குதல் சம்பவம்: மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரியும், அடையாளம் தெரியாத இலங்கை நபர்களால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க வலியுறுத்தியும் மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தில்,

"இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரண்டு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் நேற்று சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதியன்று இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத ஆறு நபர்களால், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை கிராமத்தைச்




சேர்ந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இருவேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மூர்க்கத்தனமான தாக்குதலில், இரண்டு நாட்டுப் படகுகளில் பயணித்த ஆறு மீனவர்களில், மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலின்போது, மீனவர்களது மீன்பிடிப் படகுகளில் இருந்த ஜி.பி.எஸ். கருவிகள், வி.எச்.எப். கருவிகள், மீன்பிடி வலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் அவர்கள் பிடித்த மீன்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று அடிக்கடி நடக்கும் கைது மற்றும் தாக்குதல் சம்பவங்கள், பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்க்கையில் நிச்சய மற்ற தன்மையையும், ஆபத்தையும் ஏற்படுத்துவதாக கவலையளிக்கிறது.

2024 ஆம் ஆண்டில் மட்டும் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இத்தகைய சம்பவங்களும், தாக்குதல்களும் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழும் மீனவ மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், எதிர்காலத்தில் தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."– என்று குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர் அல்லு அர்ஜுனிடம் 4 மணி நேரம் விசாரணை



'புஷ்பா 2' சிறப்பு காட்சியின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்த வழக்கில் தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனிடம் ஹைதராபாத் பொலிஸார் நேற்று சுமார் நான்கு மணிநேரம் விசாரணை நடத்தினர்.

முன்னதாக, மேற்று விசாரணைக்கு ஆஜராகும் படி அவருக்கு பொலிஸார் நேற்று முன்தினம் திங்கள்கிழமை அழைப்பாணை அனுப்பியிருந்தனர். விசாரணைக்கு ஆஜராக நடிகர் அல்லு அர்ஜுன் முற்பகல் 11 மணியளவில் சிக்கடபள்ளி பொலிஸ் நிலையத்துக்கு சென்றார். அவருடன், அவரது தந்தையும், தயாரிப்பாளருமான அல்லு அரவிந்த் மற்றும் வழக்கறிஞர்கள் சென்றனர்.

நடிகர் அல்லு அர்ஜ/னிடம், துணை பொலிஸ் ஆணையர் (மத்திய மண்டலம்) அக்ஷன் யாதவ் தலைமையிலான பொலிஸார் மதியம் 2.45 மணி வரை விசாரணை நடத்தினர்.





# ஈபிள் கோபுரத்தில் திடீர் தீ விபத்து!

கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படும் நிலையில், ஈபிள் கோபுர பகுதியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், ஈபிள் கோபுரத்தில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அதன்படி ஈபிள் கோபுரத்தில் உள்ள மின்தூக்கியில் தீ விபத்து ஏற்பட்டது.

முதல் தளத்திற்கும் 2ஆவது தளத்திற்கும் இடையே மின்தூக்கியில் தீ விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து, விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் தீயை அணைத்தனர். இந்த தீ விபத்து காரணமாக ஈபிள் கோபுர பகுதியில் குவிந்திருந்த 12,000 சுற்றுலா பயணிகள் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

மேலும், ஈபிள் கோபுர பகுதியில் சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மத்தியதரைக்கடலில் மூழ்கிய ரஷ்யாவின் சரக்குக் கப்பல்!




ஸ்பெயினுக்கும் அல்ஜீரியாவுக்கும் இடையில் மத்தியதரைக்கடலில் நேற்று உர்சா மேஜர் என்ற ரஷ்ய சரக்குக் கப்பல் மூழ்கியுள்ளது.

இயந்திர அறையில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக அந்த கப்பல் மூழ்கியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பலிலிருந்த 16 பணியாளர்களில் 14 பேர் மீட்கப்பட்டு ஸ்பெயினுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், இரண்டு பணியாளர்கள் காணாமல்போயுள்ள நிலையில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் கட்டுமான திட்டங்களுடன் தொடர்புடைய நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டிலிருந்த கப்பலே இவ்வாறு மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# சூரியனுக்கு மிக அருகில் சென்று வரலாறு படைக்க முயலும் நாசா

நாசாவின் விண்கலம் ஒன்று சூரியனுக்கு மிக அருகில் சென்று வரலாறு படைக்க முயல்கிறது.

த பார்க்கர் சோலார் ப்ரோப் அதிக வெப்பநிலை மற்றும் தீவிர கதிர்வீச்சைத் தாங்கும் திறன் கொண்டதெனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி விண்கலம் தமது பயணத்தின் போது பல நாள்களுக்குத் தொடர்பை இழக்கும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

எனினும் அதன் தகவல்கள் கிடைப்பதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டும் என நாசாவின் அறிவியல்துறைத் தலைவர் நிக்கோலா ஃபொக்ஸ் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2024


மேஷம்

இன்று நீங்கள் உங்களின் அறிவுத் திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதட்டமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகுமுறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம்.


ரிஷபம்

இன்றைய நாளில் மோசமான சூழ் நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது. பதற்றம் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.


மிதுனம்

இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலையுட னும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சி பூர்வமான போக்கு களை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புக் காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம்.


கடகம்

இன்றைய நாள் நீங்கள் விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரிய மான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும்.


சிம்மம்

இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல் களை எச்சரிக்கையான அணுகுமுறை யுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.இன்று வீணான செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. குடும்பத்திற்காக கூடுதல் செலவினங்களை செய்வீர்கள்.


கன்னி

இன்று கவலையுடன் காணப்படுவீர் கள். தினசரி செயல்களை மேற்கொள்வ தும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப் பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேரந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.


துலாம்

இன்று யதார்த்தமான அணுகு முறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படக் கூடாது. அமைதி யாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன் கள் கிடைக்கும். வெளியிடங் களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்துக்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பி ருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம். நிதியின் ஸ்திரத்தன் மையை பராமரிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

தொடை மற்றும் கால்களில் வலி காணப்படலாம்.


விருச்சிகம்

உறுதியுடனும் தைரியத்துடனும் செயற்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம் பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுப விப்பீர்கள்.இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுக ளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2024

## தனுசு

முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச் சுமைகளைக் கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.

## மகரம்

இன்று அறிவு பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

## கும்பம்

உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகக் காணப்படும் . உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## மீனம்

இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியினால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கெள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பதுக்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். கையில் ஓரளவு பணம் காணப்படும். அதை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள். எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது. தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

